Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 765/2022 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கார்த்திகா |
| Father's Name | – | க/பெ. அருண்சக்கரவர்த்தி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 24th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மூட்டாம்பாளையத்தில் எனது தந்தையின் வீட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2017ம் ஆண்டு எனக்கும் எனது கணவருக்கும் திருமணம் நடைபெற்றது. எங்கள் இருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. திருமணம் ஆனதிலிருந்தே எனக்கும் எனது கணவருக்கும் சிறு சிறு சண்டைகள் இருந்து வந்தது.

இந்நிலையில் கடந்த 30.12.2020 ம் தேதி மதிய வேளையில் எனது கணவர் என்னை திடீரென்று அடிக்க வந்தார். இதற்கு முன்னர் என்னை அடித்ததை ஏன் எனது அப்பாவிடமும் மற்றவர்களிடம் கூறினாய் என்று கூறி என்னை அடித்தார். முதுகில் என்னை குத்தினார், ரொம்ப அடித்து, எனது முடியை பிடித்து வெளியே தள்ளிவிட்டார். என்னுடைய அலைபேசியை எடுத்து இடது காலில் அடித்ததில் இடது காலின் பெருவிரலில் பட்டு ரத்தம் கட்டிவிட்டது. பெருவிரலின் நகம் சேதமடைந்துவிட்டது. என்னை அடித்தபோது, நான் சத்தம் போட்டேன். அப்போது அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள்.

எனது குழந்தைக்கு அப்போது இரண்டு வயதாகியிருந்தது. நான் சண்டையின்போது குழநதையை கையில் வைத்திருந்தேன், அச்சமயம் சைக்கிளை எடுதது என்மீதும் என் குழந்தையின் மீதும் தாக்க வந்தார். 5, 6 நபர்கள் சேர்ந்து எனது கணவரை இழுத்து வீட்டிற்குள் பூட்டிவிட்டு, என்னையும் எனது குழந்தையும் எனது அப்பா வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார்கள்.

அன்றைய தினம் வலி அதிகமானதால் பெருவிரலில் ஏற்பட்ட காயத்திற்காக நெகமம் மணிமேகலை மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் முதுகில் ஏற்பட்ட காயத்திற்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு வந்து 2 நாட்கள் சிகிச்சை எடுத்துககொண்டேன். அங்கு போலிசார் வந்து விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள்.

தற்போது என்முன் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் 30.12.2020 ம் தேதி நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றபோது நானும் அருண்சக்கரவர்த்தியும்தான் வீட்டில் இருந்தோம் என்றால் சரிதான். 02.01.2021ம் தேதிதான் மருத்துவமனை சென்றேன் என்றால் சரிதான், அதற்கு முன்னர் தனியார் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் விசாரணையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த விவரத்தை

கூறவில்லையென்றால் சரியல்ல. மேற்படி விவரத்தினை போலிசார் விசாரணையில் கூறவில்லையென்றால் சரியல்ல.

நான் போலிசாரிடம் 04.01.2021 ம் தேதி புகார் அளித்தேன் என்றால் சரிதான், போலிசார் என்னிடம் மருத்துவமனையில் வந்து வாக்குமூலம் பெற்றார்கள். போலிசார் என்னிடம் மருத்துவமனையில் வந்து வாக்குமூலம் பெற்றார் என்றும், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எனது கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன்.

எனது கணவர் என்னை பலமுறை அழைத்து நான் அவருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லையென்றால் சரிதான், எனக்கு அவருடன் சென்று வாழ பயமாக உள்ளது. நான் அவருடன் சேர்ந்து வாழ பயமாக இருப்பதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல, இப்போதுவரை எனது முதுகு தண்டில் அவர் அடித்ததன் காரணமாக பிரச்சனை இருந்து வருகிறது.

நான் சமீபத்தில் வீட்டில் சொல்லாமல் பழனிக்கு சென்றேன் என்றால் சரிதான். முத்துபாரதி என்பவருடன் சென்று பழனிக்கு சாமி கும்பிட சென்றேன் என்றால் சரியல்ல. என்மீது Woman Missing என்ற முதல் தகவல் அறிக்கை எனது தந்தையாரின் புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் பழனியில் முத்துபாரதி என்பவரை திருமணம் செய்துகொண்டு அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சரணடைந்ததாக எதிரி கூறுகிறார் என்றால் சரியல்ல. எனக்கு வேறொருவருடன் பழக்கம் இருப்பதால்தான் எனது கணவருடன் சேர்ந்து வாழ மறுத்து வருகிறேன் என்றாலும், அவர் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி என்னை திட்டவில்லையென்றாலும், எதிரியின் வீட்டில்வைத்துதான் சம்பவம் எதுவும் நடைபெறவில்லையென்றாலும் சரியல்ல.

பக்கத்தில் இருந்தவர்கள் வந்து காப்பாற்றியதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், எதிரி என்னை உண்மையிலேயே அடிக்கவில்லையென்றாலும், அவ்வாறு அடித்திருந்தால் அன்றைய தினமே மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்திருப்பேன் என்றாலும், காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றாலும் சரியல்ல, குடும்ப வாழ்க்கை என்பதால் நான் சற்று பொறுமை காத்தேன். நான் எனது அப்பாவின் தூண்டுதலின்பேரில் எதிரியின் மீது 4 நாட்கள் கழித்து பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல, எனக்கு அவர் அடித்த காயம் உடம்பில் இருந்தது, அதில் பயந்து நான் உடனடியாக புகார் அளிக்கவில்லை. ஏற்கனவே பலமுறை அடித்து சமரசம் பேசிதான் அனுப்பி வைத்தார்கள்.

மேற்படி சங்கதிகளை போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன். சொன்ன

**நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும், கணவருடன் சேர்ந்து வாழகூடாது என்று பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.**

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.